# அறுசுவை




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

# அறுசுவை

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# அறுசுவை

ஆறு சுவைகளையும் "அறுசுவை" என்ற இப்புத்தகத்தின் வாயிலாகக் கற்றுக்கொள்வோம்.

சுவை நாக்கிற்கு மட்டுமல்ல நம் மனதிற்கும் தான்!

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

பாபுவும் ஆனந்தும் நண்பர்கள். ஒருநாள் பாபு ஆனந்தின் மாந்தோப்பிற்குச் சென்றான்.



அவனை வரவேற்ற ஆனந்த் சில மாம்பழங்களை உண்பதற்குக் கொடுத்தான்.




அதோ அந்தப் பச்சை நிறப் பழத்தைப் பறித்துத் தருகிறாயா?
இது பழம் அல்ல காய் என்று கூறிக் கொண்டே பறித்துத் தந்தான்.

# ஆவலுடன் வாங்கிச் சுவைத்து ....




இந்தா!., இந்தச் சிறிய மாம்பழங்களைச் சாப்பிடுகிறாயா?
என்ன ஒரு புளிப்பு! அட! இது மாம்பழம் அல்ல!..,, எழுமிச்சம்பழம்!

இருவரும் சிரித்துக்கொண்டே ஓடினர்.

அப்போது வெள்ளை வெளேர் என்ற முயல் ஒன்றைப் பார்த்தனர்.



முயலைத் துரத்திக் கொண்டு சென்றனர். அப்போது பச்சைப் பசேலென்று பாகற்காய் கொடிகள் கண்ணில் பட்டன. இருவரும் கொடியிலிருந்து காய்களைப் பறித்துச் சுவைத்தனர்.



கசப்பு தாங்க முடியாமல் அருகிலிருந்த குளத்திற்குச் சென்று நீர் அருந்தினர்.



நீர் அருந்தி விட்டு சுற்றிலும் பார்த்தனர், பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் செடி நிறையக் கொத்துக் கொத்தாய் மிளகாய்கள் காய்த்திருந்தன. இருவரும் ஆளுக்கொரு மிளகாயைக் கடித்தவுடன்...



இருவரின் செயலைப் பார்த்த ஆனந்தின் மாமா
சிரித்துக் கொண்டே அருகில் வந்தார்.
ஆனந்தும் பாபுவும் நடந்தவற்றை மாமாவிடம் கூறினர்.



தன்னிடம் இருந்த நெல்லிக்கனியை இருவருக்கும் கொடுத்தார். நெல்லிக்கனியைச் சுவைத்த ஆனந்த்...



ஆனந்தின் மாமா கடற்கரைக்குச் செல்வதாகக் கூறினார்; இருவரும் மாமாவுடன் கடற்கரைக்குச் சென்றனர். கடலைப் பார்த்ததும் இரு நண்பர்களும் துள்ளிக் குதித்து விளையாடினர்.



ஒரு அலை இருவரையும் கீழே தள்ளியது. கீழே விழுந்ததில் இருவரின் வாயிலும் கடல் நீர் புகுந்தது.



# அறுசுவை

'அறுசுவை' என்றப் புத்தகத்தின் வழியாக இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு,... என்ற ஆறு சுவைகளைக் கற்றுக்கொண்டோம். மேலும் பாபு, ஆனந்த் இருவரின் நட்பு நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதனைப் போல உங்களுக்குப் பிடித்த சுவையினை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சுவை நாக்கிற்கு மட்டுமல்ல நம் மனதிற்கும் தான்!


உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
அ
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்
கார்ப்பு
இனிப்பு
துவர்ப்பு
புளிப்பு
உவர்ப்பு
கசப்பு